07-01-2024 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா''

இன்று பாப்தாதா தம்முடைய புது வாழ்க்கையின் சிரேஷ்ட ஆத்மாக்களை, நவயுகப் படைப்பாளர் ஆத்மாக் களுக்குப் புத்தாண்டு வாழ்த்துகள் கொடுத்துக் கொண்டிருக்கிறார். உலகத்துக்குப் புத்தாண்டு ஆரம்பமாகிக் கொண்டி ருக்கிறது. குழந்தைகளாகிய உங்கள் மனதில் நவயுகத்தின் நினைவு வந்து கொண்டிருக்கிறது. எப்படி புத்தாண்டு நாளை வரப்போகிறதோ, அது போல் புது யுகமும் நாளை வரப்போகிறது. நமது புது யுகம் இப்போது வந்தே விட்டது என்று அந்த மாதிரி ஸ்மிருதி வருகிறதா? எப்படி இன்று புத்தாண்டுக்காக மனித ஆத்மாக்களின் மனதில் குஷி இருக்கிறது, அல்பகால உற்சாகம் உள்ளது, அது போல் ஆத்மாக்களாகிய உங்களுக்கு நவயுகம் வரப்போகிறது என்ற சதா காலத்தின் குஷி உள்ளது. இன்று மற்றும் நாளைய விஷயம் என்பது போல் தோன்றுகிறது. இன்று பழைய யுகம், நாளை புதிய யுகம் முன்னால் நின்று கொண்டுள்ளது. டிராமாவின் படி இன்று மற்றும் நாளைய விஷயம் உள்ளது - அந்த மாதிரி தெளிவாக ஸ்மிருதி அனுபவமாகிறதா? அல்லது வெறுமனே புத்தாண்டைக் கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்களா? புத்தாண்டு புது யுகத்தை நினைவு படுத்துகிறது. நாளை நாம் என்னவாக இருப்போம் என்ற ஊக்கம்-உற்சாகம் மனதில் உள்ளதா? தனது புதிய சரீர ரூப ஆடை முன்னால் வருகிறதா? உங்களது புதிய சரீரம் புது யுகத்தில் எப்படி அழகாக இருந்தது என்பது நினைவிருக்கிறதா? எத்தகைய யுகம் இருந்தது, எப்படிப்பட்ட ராஜ்யம் இருந்தது, எப்படி இயற்கை தாசியாக இருந்தது, சதோப்ரதானமாக இருந்தது. அந்த ராஜ்ய அதிகாரி ஸ்திதியின் ஸ்மிருதி தெளிவாக உள்ளதா? இந்தப் புது உலகம் எவ்வளவு அழகாக உள்ளது என்பது தென்படுகிறதா? ஒரு விநாடியில் தங்களின் ராஜ்ய அதிகாரத்தை அனுபவம் செய்ய முடியுமா அல்லது செய்து கொண்டிருக்கிறீர்களா? சரி, ஒரு விநாடியில் புது யுகத்திற்குச் சென்று விடுங்கள். செல்வதற்கு வருகிறதா? எத்தனை தடவை இந்த ராஜ்ய அதிகாரத்தை அடைந்திருக்கிறீர்கள். நினைவிருக்கிறதா? அனுபவம் செய்து பாருங் கள், நமது ராஜ்யம் எவ்வளவு பிரியமானது! விலகியதாகவும் உள்ளதென்றால், பிரியமானதாகவும் உள்ளது. ஆக, ஒரு விநாடியில் நமது ராஜ்யம் மற்றும் நமது ராஜ்ய அதிகாரி சொரூபம் ஸ்மிருதி யில் வந்து விட வேண்டும். அந்த மனிதர்கள் புத்தாண்டுக்காக ஒருவர் மற்றவர்க்கு அல்ப காலத்தின் பரிசு கொடுக்கிறார்கள். மற்றும் பாபா புது யுகத்தின், உலக ராஜ்ய அதிகாரத்தின் பரிசு தருகிறார். இந்த அவிநாசி பரிசு இச்சமயம் பாபா மூலம் உங்கள் அனைவர்க்காகவும் அசையாத விதியாக அமைந்து விடுகிறது. அந்த விதியை யாராலும் அகற்ற முடியாது. அசையாதது, இடை விடாது இருப்பது. ஆக, அந்த மாதிரி பரிசு கிடைத்து விட்டது இல்லையா? எனவே இந்தப் பரிசைப் பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும். எந்த ஒரு கொள்ளையனும் இந்தப் பரிசை எடுத்துச் சென்று விடக்கூடாது. அனைவரிடமும் இரட்டைப் பூட்டு உள்ளது இல்லையா? தற்சமயம் ஒற்றைப் பூட்டு செல்லுபடியாகாது, இரட்டைப் பூட்டு வேண்டும். காட்ரெஜ் பூட்டு இல்லை, காடின் (கடவுளின்) பூட்டு வேண்டும். ஆக, காட் அந்த மாதிரி பூட்டு தந்திருக்கிறார் - அதை யாராலும் உடைக்க முடியாது. கவனக்குறைவாக இருந்தீர்களானால் கொள்ளையன் வந்து விடுவான். கொள்ளைக்காரர்களும் சாமர்த்தியசாலியாக இருக்கிறார்கள். இவர்களின் பூட்டு இப்போது தளர்வாக உள்ளது என்று அவர்களுக்குத் தெரிந்து விடுகிறது. அதனால் கவனக்குறைவாக இருக்கக் கூடாது.

ஆக, இந்தப் புத்தாண்டில் சுயத்திற்காகவும் சேவைக்காகவும் ஏதேனும் புதிய பிளான் தயாரித்திருக் கிறீர்களா? மாநாடு நடத்த வேண்டும், கலந்துரையாடல்கள் நடத்த வேண்டும் என்பதெல்லாம் இருக்கவே செய்கிறது. புதிய பிளான் என்ன உருவாக்கியிருக்கிறீர்கள்? பாப்தாதா இந்தப் புத்தாண்டில் இந்த தேசத்தில் அல்லது வெளிநாடுகளில் பலவித வர்க்கங்களின் விசேஷ ஆத்மாக் களின் ஒரு பூச்செண்டைப் பார்க்க விரும்புகிறார். வர்க்கங்களின் சேவையோ அதிகம் செய்திருக் கிறீர்கள் இல்லையா? இப்போது ஒவ்வொரு வர்க்கத்தினுடைய அந்த மாதிரி ஒவ்வொரு ரத்தினத்தைத் தயார் செய்யுங்கள். ஒரு வர்க்கம் கூட விடுபடக் கூடாது. ஏன்? இப்போது சமயம் அருகில் வந்து

கொண்டிருப்பதால் எந்த ஒரு வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும் புகார் சொல்லக் கூடாது - எங்களுடைய வர்க்கம் விடுபட்டு விட்டது என்று. ஒவ்வொரு வர்க்கத்திலும் விசேஷமாக ஒவ்வொருவரும் நல்ல குவாலிட்டியினராக இருக்க வேண்டும் - அவர்கள் மைக்கின் வேலை செய்யக் கூடியவர்களாக வேண்டும். ஏனென்றால் எப்படி சமயம் அருகில் வந்து கொண்டிருக்கிறது என்றால் அனைத்து வர்க்கங்களைச் சேர்ந்தவர்கள், அனைத்து தர்மங்களைச் சேர்ந்தவர்கள், அனைவரின் வாயிலிருந்து ஒரு சப்தம் வெளிவர வேண்டும் - தந்தை வந்து விட்டார். ஏனென்றால் இந்த சங்கமயுகத்தில் தான் அனைத்து தர்ம ஸ்தாபகர் ஆத்மாக்கள் மற்றும் அனைத்து வர்க்க ஆத்மாக்களுக்கும் விதை போட வேண்டும். அவர்கள் அவ்வளவு சக்தியைத் தங்களோடு எடுத்துச் செல்வார்கள் - பிறகு தங்கள்- தங்கள் சமயத்தில் வர்க்கம் மற்றும் தர்மத்தின் கண்டுபிடிப்பாளர் ஆவார்கள். ஆக, அனைத்து விதைகளையும் நீங்கள் தயார் செய்ய வேண்டும். யார் சமயத்தில் அவரவர் துறைக்கு நிமித்தமாகிறார்களோ, ஏனென்றால் பாபா விதையாக இருக்கிறார். பிராமண ஆத்மாக்கள் நீங்கள் தண்டாக இருக்கிறீர்கள். ஆத்மாக்கள் அனைவரும் விதை மற்றும் தண்டி லிருந்து தான் வெளிவருகிறார்கள். ஆக, அந்த மாதிரி பூச்செண்டை பாபாவுக்கு முன்னால் கொண்டு வாருங்கள் - வெளிநாட்டினரும் கூட, உள்நாட்டினரும் கூட. ஒவ்வொருவரும் சேம்பிள் கொண்டு வாருங்கள். சேம்பிளில் இருந்து மற்ற அநேகம் தானாகவே உருவாகின்றன. ஆனால் ஒவ்வொருவரும் சக்தி வாய்ந்த மைக் ஆக வேண்டும். அப்படிப்பட்ட விதை என்றாலும் சரி, தர்மம் அல்லது வர்க்கம் என்று சொன்னாலும் சரி, அல்லது பலவிதப் பூக்களின் பூச்செண்டு என்று சொன்னாலும் சரி, அது தயாராக வேண்டும். ஒன்று கூட விடுபடக் கூடாது. அப்போது தான் விஷ்வ கல்யாண்காரி அல்லது சர்வ ஆத்மாக்களுக்கும் விமோசனமளிப்பதற்கு நிமித்தமான ஆத்மாக்கள் என்று உங்களைச் சொல்வார்கள். ஒரு கிளை கூட குறையக் கூடாது. அனைத்துக் கிளைகளும் வேண்டும். உங்கள் புது யுகத்தில் அநேக வர்க்கங்கள் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அந்த ஆத்மாக்களிலும் கூட துவாபர யுகத்தில் அல்லது கலியுகத்தில் கண்டுபிடிப்பாளர் யார் நிமித்த மாக இருக்கிறார்களோ, அவர்களுக்கு சக்தி உங்கள் மூலமாகத் தான் கிடைக்க வேண்டும். எப்படி அனைத்து தர்மப் பிதாக்களும் உங்கள் முன்னால் பாபாவின் கொடி, பிரத்தியட்சதாவின் கொடி ஏற்றுவதில் சகயோகி ஆவார்கள், அப்போது சொல்வார்கள் - அனைவரின் சகயோகத்தினால் சுகமய உலகத்தின் படைப்பு. சகயோகிகள் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக் குள் இப்போது விசேஷ ஆத்மாவை சகயோகத்தில் முன்னேறச் செய்யுங்கள். நிமித்தமாக்குங்கள். நிமித்தமாக்குவதற்கான விதை போடுங்கள். என்ன செய்ய வேண்டும் எனப் புரிந்ததா? வெளி நாடுகளிலும் இப்போது ஐ.பி. அல்லது வி.ஐ.பி.க்களின் தொடர்போ சகஜமாகி விட்டது இல்லையா? கடினம் இல்லை தானே? கடினமா, சுலபமா? ஆக, நீங்கள் அனைவரும் அடுத்த புத்தாண்டில் வரும் போது அந்தப் புத்தாண்டின் பரிசாக பாப்தாதா அத்தகைய பூச்செண்டைப் பார்க்க விரும்புகிறார். ஓராண்டு உள்ளது, குறைவாக இல்லை. இந்த தேசத்தவர்களும் செய்வார்களா, வெளிநாட்டினரும் செய்வார்களா? (ஹாஞ்ஜீ). அவசியம் செய்வோம். சொல்லுங்கள் -- நடந்தே விட்டது என்று. நிமித்தமாக மட்டும் ஆக வேண்டும். இரட்டை வெளிநாட்டினர் சொல்லுங்கள். நல்லது, பார்க்கலாம், முதலில் யார் தயார் செய்கிறார்கள் - தேசத்தவரா, வெளிநாட்டினரா என்று. மற்றும் எவ்வளவு பெரிய பூச்செண்டைத் தயார் செய்கிறார்கள்? - என்று. சரி தானே? நாலாபுறமும்

கேட்டுக் கொண்டி ருக்கிறார்கள். இந்த தேசத்தவரும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்போது ஊக்கம் வந்து கொண்டிருக்கிறது. அவர்கள் மனதில் பிளான் உருவாகிக் கொண்டிருக்கிறது - இதைச் செய்வோம், அதைச் செய்வோம் என்று. நல்லது, இதுவோ உலக சேவை ஆயிற்று.

சுயத்திற்காக என்ன செய்வீர்கள்? அதற்காகவும் பிளான் தயார் செய்வீர்கள் இல்லையா? ஏனென்றால் சுய நன்மைக்கான சிரேஷ்ட பிளான் உருவாக்கவில்லை என்றால் உலக சேவையில் சகாஷ் கிடைக்காது. எனவே பாப்தாதா அனைவரின் மனதின் ஊக்கம்-உற்சாகத்தை அறிந்திருந் தாலும் இதைத் தான் சொல்வார் - ஒவ்வோர் உத்சவத்திலும் குழந்தைகள் கோல்டன் ஜுபிலிக்கா ரர்களாயினும் சரி, டயமண்ட் ஜுபிலிக்காரர்களாயினும் சரி, சில்வர் ஜுபிலிக் காரர்களாயினும் சரி, இன்னும் வேறு என்னென்ன ஜுபிலிகள் வரப் போகின்றனவோ, அனைவருமே மனதார, ஊக்கம்-உற்சாகத்துடன் தங்கள் மனதில் பாபாவிடம் உறுதிமொழி கொடுத்திருக்கிறீர்கள் - நாங்கள் பாப்-சமான் ஆகியே தீர்வோம். அனைவரும் இந்த உறுதிமொழி எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? இரட்டை வெளிநாட்டினர் உறுதிமொழி எடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? (அனைவரும் கையசைத்தார்கள்) நல்லது, வாழ்த்துகள் உறுதிமொழியோ, மிக இனிமையாக, மிக நன்றாக, மிக அன்பாக, மிகவும் சக்திசாலியாக எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். இப்போது இன்னும் அதை நிறை வேற்றிக் கொண்டே இருக்க வேண்டும். உறுதிமொழி எடுப்பவர்கள் அந்தச் சமயம் மிகுந்த ஊக்கம்-உற்சாகத்தோடு எடுக்கிறார்கள். தைரியமும் மிக நன்றாகவே வைக்கிறார்கள். பிறகு என்னவா கிறது? சில நேரம் மாயா எலி ரூபத்தில் வந்து விடுகிறது. சில நேரம் பூனை ரூபத்தில் வந்து விடுகிறது. பூனை என்ன செய்கிறது? மியாவ்-மியாவ் என்று சப்தமிடுகிறது இல்லையா? குழந்தை கள் என்ன செய்கிறார்கள்? மைங். மைங், மைங் -- நான் நான் நான் என்றால் இந்தப் பூனையின் மியாவ் மியாவ் சொல்லக் கூடாது. எலி என்ன செய்கிறது? எலி புத்தியற்றதாகி, என்ன வருகிறதோ, அதைக் கடித்துச் சாப்பிட்டு விடுகிறது. மாயாவும் குழந்தைகளின் கஜானாவைக் கடித்துச் சாப்பிட்டு விடுகிறது. சில நேரம் சிங்கம் வந்து விடுகிறது. சிங்கம் என்ன செய்கிறது? பயமற்றவர்களுக்கு பயத்தை உருவாக்கி விடுகிறது. சர்வசக்திவான் குழந்தைகளை மனச்சோர் வடைந்தவர்களாக ஆக்கி விடுகிறது. இது போல் செய்யக் கூடாது. வரவிடக் கூடாது. இரட்டைப் பூட்டுப் போட்டுப் பூட்டி வைத்து விட வேண்டும். இந்த ஆண்டு எதையும் வரவிடக் கூடாது.

இந்த ஆண்டை அனைத்துப் பிரச்சினைகளில் இருந்தும் விடுபட்ட ஆண்டாகக் கொண்டாடுங்கள். முக்தி ஆண்டு. எப்போது இந்த முக்தி ஆண்டைக் கொண்டாடுகிறீர்களோ, அப்போது முக்திதாமத் திற்குச் செல்வீர்கள். இதற்காக என்ன செய்வீர்கள்? மிகவும் சிறிய விஷயம். பெரிய விஷய மில்லை. பாப்தாதா சிறிய ஸ்லோகன் மட்டும் கொடுத்துக் கொண்டிருக்கிறார். பயனுள்ளதாக்குங் கள், வெற்றி பெறுங்கள். புரிந்ததா? பயனுள்ளதாக்குங்கள், வெற்றியைப் பெற்றுக் கொள்ளுங்கள். எதைப் பயனுள்ளதாக்க வேண்டும்? உங்களிடம் என்னவெல்லாம் உள்ளதோ, உங்களுடைய சொத்து கள் என்னென்ன உள்ளனவோ - சமயம், சங்கல்பம், சுவாசம், உடல்-மனம்-செல்வம் அனைத்தையும் பயனுள்ளதாக்குங்கள். வீணாக்காதீர்கள். வருங்காலத்திற்குப் பயன்படும் என்றெண்ணிப் பத்திரப் படுத்தாதீர்கள். சங்கல்பத்தையும்

கூடப்பயனுள்ளதாக்குங்கள். ஒவ்வொரு சங்கல்பமும் உங்களுடைய சொத்தாகும். எப்படி பணம் ஸ்தூல சொத்தாக உள்ளதோ, அதே போல் சமயம், சுவாசம், சங்கல்பம் சூட்சும சொத்தாகும். ஒரு சங்கல்பம் கூட வீணாகப் போகக் கூடாது. பயனுள்ளதாக வேண்டும். மனசா சேவை மூலமாகவோ, வாய்மொழி சேவை மூலமாகவோ, கர்மத்தின் மூலமாகவோ எவ்வளவு பயனுள்ளதாக ஆக்கினோம், எவ்வளவு சேமித்தோம என்று சோதித்துப் பாருங்கள். மேலும் பாப்தாதா இந்த ஆண்டுக்கான விசேஷ ஸ்லோகன் தருகிறார் - பயனுள்ளதாக்குங்கள் மற்றும் பல கோடி மடங்கு வெற்றியை அனுபவம் செய்யுங்கள். இந்தப் பிரத்தியட்ச பலனை நீங்கள் எளிதாகப் பெற முடியும் - உண்மையான மனம் இருந்தால் போதும். உண்மையான மனதின் மீது கள்ளங்கபடற்ற தந்தை மிகவும் சகஜ ரீதியில் திருப்தியடைந்து விடுகிறார். எனவே பயனுள்ளதாக்குங்கள். ஞான செல்வம், சக்திகளின் செல்வம், குணங்களின் செல்வம் இவற்றை ஒவ்வொரு சமயமும் பயனுள்ளதாக்குங்கள். பயனுள்ளதாக ஆக்குவதற்கு வருகிறதா அல்லது விலக்கி வைப்பதற்கு அல்லது பத்திரப்படுத்துவதற்கு அதிகம் வருகிறதா? விலக்கி வைக்காதீர்கள். ஈடுபடுத்துங்கள். திடீரென்று தான் எல்லாம் நடக்கும் என்று நீங்கள் சொல்லும் போது எவர்-ரெடி ஆக வேண்டும். ஆகவே என்னவெல்லாம் உங்களிடம் உள்ளனவோ, அவற்றைப் பயனுள்ளதாக்குங்கள். பாப்தாதாவுக்கு வேண்டிய தில்லை. தங்களுக்காகச் சேமித்துக் கொள்ளுங்கள். பாப்தாதாவோ கொடுக்கும் வள்ளல்.. ஆனால் பயனுள்ளதாக ஆக்குவது என்றால் சேமிப்பது. ஏனென்றால் பாப்தாதா சமயத்தின் படி சேமிப்புக் கணக்கைப் பார்த்தார். ஒவ்வொரு குழந்தையின் சேமிப்புக் கணக்கு பாப்தாதாவிடம் உள்ளது. ஆக, சேமிப்புக் கணக்கில் என்ன பார்த்தார்? குழந்தைகள் அநேகர் நினைக்கிறார்கள் அல்லது அதிகம் சொல்கிறார்கள் - நமக்கு இதுவும் சேமிப்பு, இதுவும் சேமிப்பு, வெளி யிலிருந்து சேமிப்புக் கணக்கை நிறைய வர்ணனை செய்கின்றனர். ஆனால் பாபாவின் சேமிப்புக் கணக்கில் யார் எவ்வளவு சொல்கிறார்களோ, அதை விட சேமிப்பு மிகவும் குறைவு எனப் புரிந்து கொள்கிறார்கள். ஏன்? அதே முதல் பாடம் - நான் மற்றும் எனது மனம். நான் செய்தேன். இது எனது சேவை, இது எனது காரியம். ஆக, சேமிக்கும் போது அவர்கள் புரிந்து கொள்கிறார்கள் -- சேமிக்கிறோம் என்று. ஆனால் அது இயல்பான சேமிப்பிலிருந்து வெளியேறி, வீணானவற்றின் கணக்கில் சேமிப்பாகி விடுகிறது. இது இயல்பான சூட்சும மெஷினரி. பாபா செய்வித்தார், பாபாவின் சேவை, எனது சேவை இல்லை. நான் செய்தேன் என்பது கிடையாது. வர்ணனை செய்யாதீர்கள் - நான் தான் இதைச் செய்தேன், நான் இதைச் செய்கிறேன் இந்த நான்-நான் என்பது கூடாது. பாபா, பாபா என்று சொல்லுங்கள். அப்போது பல கோடி மடங்கு சேமிப்பாகும். மற்றும் நான், எனது எனச் சொல்வீர்களானால் டிரான்ஸ்ஃபர் ஆகி வீணானவற்றின் கணக்கில் சேமிப்பாகி விடும். இந்த இயல்பான அல்லது தானியங்கி மெஷினரி மிக வேகமானதாகும். உங்களுக்குத் தெரியாமலே நடப்பது இது. இதையும் மிகவும் உண்மையான மனதோடு, நான் என்பதில் இருந்து விலகியிருந்து, சோதித்தறிபவர் அறிந்து கொள்ள முடியும். எப்போது ஆதி ரத்தினங்கள் நீங்கள் ஆரம்பத்தில் ஸ்தாபனையின் போது வந்தவர்கள், சேவைக்காக வெளியில் சென்றீர்கள் என்றால் அப்போது என்ன பாவனை இருந்தது? பேச்சு வெளிவந்ததா? (வாய் திறந்து பேச முடிந்ததா?) நான் என்பது இருந்ததா? பாபா-பாபா எனச் சொல்லிக் கொண்டிருந்தீர்கள். அப்போது பாபாவுக்கு வாரிசாக ஆவார்கள். யார் இன்று சேவையின் ஆரம்பம் ஆனீர்களோ, இது பாபா-பாபா

எனச் சொல்வதற்கான நிரூபணம்.

இப்போது பாபாவின் வாரிசு குவாலிட்டி மிகக் குறைவாக வருகிறார்கள். ஏன்? பாபா மற்றும் நான் என்பது கலப்படமாகிறது. அதனால் இந்த ஆண்டில் பாப்தாதா திறந்த மனதோடு வரதானம் கொடுத்துக் கொண்டு இருக்கிறார் - எவ்வளவு சேமிக்க விரும்புகிறீர்களோ, அவ்வளவு சேமித்துக் கொள்ளுங்கள். சேமித்துக் கொள்ளுங்கள், சேமித்துக் கொள்ளுங்கள். பயனுள்ளதாக்குங்கள், வெற்றி மூர்த்தி ஆகுங்கள். நல்லது.

இப்போது என்ன உத்சவம் கொண்டாடினீர்கள்? சில்வர் ஜுபிலி. சில்வர் ஜுபிலிக் காரர்கள் கை உயர்த்துங்கள். யாருக்கு செரிமனி கொண்டாடப் பட்டதோ, அவர்கள் கை உயர்த்துங்கள். டபுள் செரிமனி கொண்டாடி இருக்கிறீர்கள். பாரதத்துக்கும் மற்றும் வெளிநாடுகளுக்கும். அந்த செரிமனி கொண்டாடுவது நல்லது தான். அதாவது தனக்குத் தான் பக்கா உறுதிமொழியின் முத்திரை இட்டுக் கொள்வது. செரிமனி கொண்டாடினீர்கள். பாப்தாதாவுக்கும் காட்சி நன்றாகப் பிடித்துள்ளது. அதோடு என்ன சங்கல்பம் செய்கிறீர்களோ, அதற்கு இத்தகைய அல்மைட்டி அரசாங்கத்தின் முத்திரை இடுங்கள் - அது சதா அவிநாசியாக, அசையாததாக இருக்கட்டும். கொண்டாடுவது என்றால் உறுதிமொழியைக் காப்பாற்றுவது. ஆக, அத்தகைய பக்கா முத்திரை பதித்தீர்களா? அல்லது பக்குவமில்லாத முத்திரை இட்டீர்களா? பக்காவாக இட்டீர்களா? இந்த சில்வர் ஜுபிலியின் குமார்கள் நன்றாகவே கை அசைத்துக் கொண்டிருக்கிறார்கள். பக்காவாகக் கொண்டாடினீர்களா? நல்லது. இந்தக் காட்சியை மறக்கக் கூடாது. எப்போதாவது ஒரு சிறிது பலவீனம் வந்தாலும் தனது உத்சவத்தின் ஃபோட்டோவை முன்னால் கொண்டு வாருங்கள். ஒவ்வொருவரின் ஃபோட்டோ எடுக்கிறீர்கள் இல்லையா? அனைவருக்கும் கிடைத்ததா? சும்மா பேருக்கு ஃபோட்டோ எடுக்கக் கூடாது. ஃபோட்டோ எதற்காக எடுக்கப்படுகிறதென்றால் அந்த மாதிரி ஏதேனும் சமயம் வரும் போது ஃபோட்டோவை முன்னால் வைப்பதற்காக. சும்மா அலமாரியில் பூட்டி வைத்து விடுகிறீர்கள், சமயத்தில் கூட நினைவு வரவில்லை என்று அந்த மாதிரி இல்லை. இது அனைத்தையும் விடப் பெரிய பரிசாகும். இது நினைவு படுத்துவதற்கான அடையாள மாகும். நல்லது.

இரட்டை வெளிநாட்டினர் என்ன அற்புதம் செய்து காட்டுவீர்கள்? இரட்டை வெளிநாட்டினர் அந்த மாதிரி அற்புதம் செய்து காட்டுங்கள் - அத்தகைய ஆத்மாக்களுக்கு செய்தி கொடுங்கள், அவர்கள் பாரதத்திற்கு மைக் ஆக வேண்டும். ஏனென்றால் பாரதத்தின் மைக்கிற்கும் கூட பிரபாவம் உள்ளது. ஆனால் வெளிநாட்டினரின் மைக்கின் பிரபாவம் டபுள் ஆகிவிடும். ஆக, இரட்டை வெளிநாட்டினர் அத்தகைய மைக் தயார் செய்ய வேண்டும். செய்வீர்களா? அடுத்த ஆண்டிலேயே மைக் வர வேண்டும். வெறுமனே சொற்பொழிவு செய்து விட்டுச் சென்று விட்டார்கள் என்று அந்த மாதிரி இருக்கக் கூடாது. சம்பந்தத்தில் சமீபமாக வேண்டும். ஞான-யோகத்தை முறையாகக் கற்றறிந்த வராக இல்லாமல் இருக்கலாம். ஆனால் உண்மையிலேயே இது ஈஸ்வரிய காரியம், இது போலத் தான் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள், ஆனால் எனக்குள் தைரியம் குறைவு என நினைக்கலாம் ஆனால் அதற்கு எந்தத் தடையும் இல்லை.

மற்றவர்களுக்கு நிமித்த மைக் ஆகி ஆகியே சுயம் ஆகியே விடுவார்கள். அது போல் நேரடியாக மாணவர் ஆக மாட்டார்கள். ஆனால் சேவை யின் பலத்தினால் மற்றவர்களுக்கு நிமித்தமாகி அவர்களின் பிரபாவத்தினால் ஆகி விடுவார்கள். ஆக, இரட்டை வெளி நாட்டினர் கேட்டீர்களா? எந்த தேசம் நிமித்தமாகிறது என்று இப்போது பார்க்கலாம், எந்த தேசம் நிமித்தமாகிறதோ, அதற்கு விருது கொடுப்போம்.

நவயுக உலக அதிகாரிகள் அனைவருக்கும், புதிய வாழ்க்கை மூலம் உலக மாற்றம் செய்யும் ஆத்மாக்களுக்கு, சதா பயனுள்ளதாக்குவதன் மூலம் வெற்றி மூர்த்தி ஆகக்கூடிய ஆத்மாக்களுக்கு, சதா தான் கொடுத்த உறுதி மொழிகளுக்கு சாகார சொரூபம் கொடுக்கக் கூடிய, அசையாத, அகண்ட (இடைவிடாத) சொரூப ஆத்மாக்களுக்கு, சதா உத்சவத்தில் இருந்து, மற்றவர்களுக்கும் உத்சவத்தின் மூலம் உற்சாகம் கொடுக்கக் கூடிய ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் புத்தாண்டு மற்றும் புது யுக ஸ்தாபனைக்கான வாழ்த்துகள், வாழ்த்துகள், வாழ்த்துகள். அதனுடன் கூடவே தைரியம் வைத்து முன்னேறிச் செல்லும் மற்றும் தைரியம் வைத்துத் தந்தையின் உதவியைப் பெறும் அத்தகைய குழந்தைகள் அனைவருக்கும் பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் நமஸ்தே.

இரவு 12 மணிக்குப் பிறகு பாப்தாதா குழந்தைகள் அனைவருக்கும் மீண்டும் புத்தாண்டு வாழ்த்து கூறினார்

உலகத்தின் ஒவ்வொரு மூலையிலும், உலகத்தின் நாலாபுறமும் மற்றும் விசேஷமாக புதிய வாழ்க்கையில் இருக்கக் கூடிய அனைவருக்கும் புத்தாண்டின் கூடவே புது யுகத்திற்காகவும் வாழ்த்துகள், வாழ்த்துகள், வாழ்த்துகள். பிராமணக் குழந்தைகளுக்கோ ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு விநாடியும் புதியது. ஆக, இப்போது பழைய ஆண்டுக்கு விடை கொடுக்கப் படுகிறது மற்றும் புத்தாண்டுக்கு வாழ்த்துகள். அது போல் சதா ஒவ்வொரு விநாடியும் எந்த சங்கல்பம் செய்தாலும், கர்மம் செய்தாலும், ஒவ்வொரு கர்மத்திலும் சங்கல்பத்திலும் வாழ்த்துகளுடன் இருப்பவர்கள் நீங்கள் யாருடன் தொடர்பில் இருந்தாலும் சதா வாழ்த்துகள், வாழ்த்துகள் என்ற இந்தப் பாடலையே பாடுங்கள். இந்தப் புத்தாண்டில் அனைவருக்கும் என்ன கிடைத்தாலும் அல்லது ஒன்றாக வாழ்ந்தாலும், அவர்களுக்கு சதா குஷியின் தில்குஷ் (மனதை மகிழ்விக்கும்) மிட்டாய் சுவைக்கக் கொடுத்துக் கொண்டே இருங்கள் மற்றும் குஷியில் மனதால் நடனமாடிக் கொண்டே இருங்கள். சேவையில் அனைவருக்கும் குஷியின் கஜானாவை நிறைத்து- நிறைத்துக் கொடுத்துக் கொண்டே இருங்கள். ஆக, அத்தகைய புது வாழ்க்கை, புது ஊக்கம்-உற்சாகத்தின் நாலாபுறத்தின் குழந்தைகளுக்குப் புத்தாண்டுடன் கூடவே வாழ்த்துகள், வாழ்த்துகள். குட் நைட் மற்றும் குட் மார்னிங்! நல்லது. ஓம் சாந்தி.

வரதானம் : திட நிச்சயத்தின் ஆதாரத்தில் சதா வெற்றியாளர் ஆகக்கூடிய பிரம்மா பாபாவின் சிநேகி ஆகுக.

யார் திட நிச்சயம் வைக்கிறார்களோ, அப்போது நிச்சயத்தின் வெற்றி ஒரு போதும் நழுவ முடியாது. ஐந்து தத்துவங்கள் அல்லது ஆத்மாக்கள் எவ்வளவு தான் எதிர்கொண்டாலும் அவர்கள் எதிர்ப்பார்கள், நீங்கள் அசையாத நிச்சயத்தின் ஆதாரத்தில் உள்ளடக்கும் சக்தி மூலம் அந்த எதிர்ப்பை உள்ளடக்கி விடுவீர்கள். ஒரு போதும் நிச்சயத்தில் குழப்பம் ஏற்படாது. அது போல்

அசையாதிருக்கக் கூடிய வெற்றியாளர் குழந்தைகள் தாம் பாபாவுக்கு சிநேகி ஆவார்கள். சிநேகி குழந்தைகள் எப்போதும் பிரம்மா பாபாவின் புஜங்களுக்குள் நிறைந்திருக்கிறார்கள்.

சுலோகன்: சர்வ கஜானாக்களின் சாவியைப்பெற வேண்டுமானால் பரமாத்ம அன்பின் அனுபவி ஆகுங்கள்.

அவ்யக்த அமைதி மூலம் டபுள் லைட் ஃபரிஸ்தா ஸ்திதியை அனுபவம் செய்யுங்கள்

ஒவ்வொரு விஷயத்திலும் உள்ளுணர்வில், திருஷ்டியில், கர்மத்தில் விலகிய தன்மையின் அனுபவம் இருக்க வேண்டும் என்ற பேச்சு இருந்துள்ளது. ஆனால் மிக விலகியவராகவும் மிக அன்பானவராகவும் தோன்றுகிற ஆத்மிக அன்பானவர். நம்பர் ஒன் பிரம்மாவின் ஆத்மாவுடன் நீங்கள் அனைவரும் கூட ஃபரிஸ்தா ஆகிப் பரந்தாமத்திற்குச் செல்ல வேண்டும். எனவே மனதின் ஒருமுகத் தன்மை மீது கவனம் கொடுங்கள். கட்டளைப்படி மனதை நடத்துங்கள்.